## DEPOSITION OF WITNESS

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 109/2020 |
| Name | : Sivakumar |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடையாளர்பாளையத்தில் வசிக்கிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 14.07.2019 ம் தேதி காலை 10.30 மணிக்கு தாராபுரம் – உடுமலை ரோட்டில் எனது அப்பா சுப்பிரமணி வெற்றி நகர் செல்வதற்காக கிழக்கிலிருந்து மேற்கே சென்றவர் வலது புறமாக திரும்புவதற்கு கை காட்டி திரும்பிய போது மேற்கிலிருந்து கிழக்கே தாராபுரத்திற்கு சென்று கொண்டிருந்த கார் TN 10 AD 9996 என்ற எண் கொண்ட BENZ கார் மோதி என் அப்பாவிற்கு பின்னால் தலையில் காயம் ஏற்பட்டது. அப்போது நானும், எனது நண்பர் பசுபதி ராஜாவும் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அருகில் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள். தனியார் ஆம்புலன்ஸிற்கு போன் செய்து வந்து என் அப்பாவை உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். நான் உடன் சென்றேன். மருத்துவர் பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி பின்னால் பெயர் தெரிந்து கொண்ட குமரேசன் என்பவர் தான் சம்மந்தப்பட் BENZ காரை ஓட்டி வந்த நபர் ஆவார். என் அப்பா உடலை பிரேத பரிசோதனை செய்து பெற்றுக்கொண்டேன். இது சம்மந்தமாக அன்றே போலீஸில்

புகார் அளித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரில் உள்ள வாசகங்கள் நான் தான் எழுதச் சொன்னேன். யார் எழுதியது என்றால் ஞாபகம் இல்லை. போலீசார் எழுதினார்களா அல்லது என்னுடன் இருந்தவர்கள் யாராவது எழுதினார்களா என்றால் ஞாபகம் இல்லை. புகாரில் எதிரியின் விலாசம் கேட்டு தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளது யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் அருகில் இருந்தவர்களிடம் கேட்டேன். யார் என்று குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. புகாரில் நானும், பசுபதி ராஜும் எந்த இடத்தில் நின்று கொண்டிருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் சுமார் 11.00 மணி இருக்கும் என்றால் சரியல்ல. 10.30 மணி இருக்கும். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் டெம்போ ஸ்டாண்ட் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 500 மீட்டர் தள்ளி இருக்கும் என்றால் சரிதான்.

(2) எனது நண்பர் பசுபதி ராஜ் ஒர்க் ஷாப்பில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் டெம்போ ஸ்டாண்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. விபத்து குறித்து தகவல் தெரிந்து தான் நான் சம்பவ சென்றேன் என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனை முடியும் வரை நான் மருத்துவமனையில் தான் இருந்தேன் என்றால் சரியல்ல எனது அப்பாவை மருத்துவமனையில் கொண்டு சென்று விட்டுவிட்டு நான் கணியூர் வந்து புகார் கொடுத்து பின்பு மருத்துவமனை சென்றேன். சுமார் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரத்திற்குள் கணியூர் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தேன். 11 மணி அளவில் காவல் நிலையம் வந்து விட்டேனா என்றால் நேரம் சரியாக தெரியவில்லை. சுமார் அரை மணி முன் பின் இருக்கலாம்.

(3) சம்பவ இடத்தை காவல் ஆய்வாளருக்கு யார் எத்தனை மணிக்கு காட்டினார்கள் என்றால் சம்பவ இடத்தின் அருகில் இருந்த நண்பர்கள் காட்டியதாக என்னிடம் சொன்னார்கள். புகார் கொடுத்த பின்பு உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டார் நானும் உடன் இருந்தேன். புகார் கொடுத்த பிறகு சம்பவ இடத்தை மதியம்

1 மணிக்கு ஆய்வாளருடன் பார்வையிட்டதாக போலீஸ் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல புகார் கொடுத்த பின்பு சம்பவ இடத்தை பார்வையிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம் பிரேத பரிசோதனை சமயத்தில் விசாரித்தார்கள். எனது தந்தைக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. அவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் அதைப் பற்றி தெரியாது.

(4) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தாராபுரம் – உடுமலை மெயின் ரோடு என்றால் சரிதான். சம்பவ இடம் அருகே பள்ளிகள் வணிக நிறுவனங்கள் மக்கள் வசிப்பிடம் உள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் பசுபதி ராஜ், மருதாத்தாள் எனது உறவினர்கள் சாட்சிகள் முத்துக்குமார், பாரதி, கௌதமராஜ், உதயபிரகாஷ் ஆகியோர் நண்பர்கள். உண்மையிலேயே என் தந்தையின் அஜாக்கிரதை காரணமாக தான் சம்பவம் நடைபெற்றது என்றதால் தான் அருகாமையிலுள்ள சாட்சிகள் யாரும் முன் வராததால் அவர்களை சேர்க்காமல் எனது உறவினர்கள் மற்றும் நண்பர்களை சாட்சிகளாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு விபத்து சமயத்தில் 57 வயது இருக்கும். எனது தந்தைக்கு வயதின் காரணமாக அவருக்கு கவனமின்மை மற்றும் பார்வை குறைபாடு இருந்தது என்றால் சரியல்ல. கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எனது தந்தை கிழமேல் மெயின் ரோட்டில் சென்றார் என்றால் சரிதான். வலது பக்கம் வெற்றி நகர் செல்ல வேண்டி மேற்கில் இருந்து எதிரி ஓட்டி வந்த வாகனத்தை கவனிக்காமல் திடீரென்று திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது தந்தையின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. எந்த வித சமிஞ்சையும் செய்யாமல் திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இழப்பீடு வழக்கு தாக்கல் செய்து இழப்பீடு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 109/2020 |
| Name | : Marudhatthal |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடையார்பாளையத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்து போனவர் எனது கணவர் ஆவார். தேதி ஞாபகம் இல்லை. சுமார் 5-6 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்ததாக எனது மகன் சிவக்குமார் காலை 10.30 மணிக்கு போன் செய்து அப்பாவிற்கு விபத்து நடந்து விட்டது என்றும் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் சொல்லி என்னை வரச்சொன்னார். உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் என் கணவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த விபத்து நடந்த சமயத்தில் நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். விபத்தைப் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்